செ.வெ.எண்: 535 நாள்: 24.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து பிளாஸ்டிக் மீதான தடையை அமல்படுத்த அனைவரும் முன்வர வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழக அரசின் ஆணையின்படி, பிளாஸ்டிக் பொருட்களின் மீதான தடை ஜனவரி 1, 2019 முதல் அமலில் இருந்து வருகிறது.

உணவு மடக்குவதற்கு பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தாள், பிளாஸ்டிக் தெர்மோகோல் தகடுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட காகிதத் தகடுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட காகிதக்கோப்பைகள், பிளாஸ்டிக் தேநீர்க்கோப்பைகள், பிளாஸ்டிக் கோப்பைகள், தெர்மோகோல் கோப்பைகள், தண்ணீர் பைகள், பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் ஸ்ட்ரா, பிளாஸ்டிக் குவளை, நெய்யப்படாத பிளாஸ்டிக் பாலிப்ரொப்பிலீன் பைகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட கேரி பைகள், பிளாஸ்டிக் கொடிகள் உள்ளிட்ட அனைத்து அளவுகள் மற்றும் தடிமன் கொண்ட பிளாஸ்டிக் கேரி பைகள் ஆகிய பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்ட பொருட்களில் அடங்கும்.

இந்த தடை அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு பொருந்தும்.

பிளாஸ்டிக் தடையை வெற்றிகரமாக செயல்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

வர்த்தக சங்கங்கள், தன்னார்வலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரின் பங்களிப்புடன் பிளாஸ்டிக் தடையை செயல்படுத்திட வேண்டும்.

பிளாஸ்டிக் மாசுபாட்டிலிருந்து அழகான மாநிலத்தை பாதுகாக்க பிளாஸ்டிக் மீதான தடையை அமல்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவோர் மற்றும் விற்பனை செய்வோர் மீது அபராதம் விதிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**